CC186/2015
18.02.2021

அசா.1 குபம எண்.2799/2020 ன் கீழ் மறுபடியும் அழைக்கப்பட்டு 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்ட்டு குறுக்கு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

PW1 – எஸ்.கே.செந்தில்குமார் த/பெ கந்தசாமி

நான் நெகமம் மதுபான கடையில் 2012 ஆண்டு முதல் மேற்பார்வையாளராக பணியாற்றிவருகிறேன். அந்த கடையில் மொத்தம் 5 பணியாளர்கள் வேலையில் இருக்கிறார்கள். சம்பவ தினத்தன்று இருவர் அலுவலில் இருந்தனர். அவர்கள் கிருபாகரன் விற்பனையாளர், மற்றும் கேவி ஆறுமுகம் உதவி விற்பனையாளர் இருந்தனர். சக்திவேல் ஆனந்தகுமார் ஆகியோருக்கு அன்று அலுவலல் இல்லை. கணக்காளர் என்று, காசாளர் என்று தனிபொறுப்பு கிடையாது. அதனையும் நான்தான் கவனித்துவருகிறேன். எங்கள் வேலை நேரம் காலை 10 மணிமுதல் இரவு 10 மணி ஆகும். மதுபானம் பில் போட்டுதான் விற்பனை செய்யப்படும் என்றால் சரிதான். பில் புத்தகம் எங்கள் டாஸ்மார்க்கில் உள்ளது என்றால் சரிதான். எழுத்துபூர்வமான ஸ்டாக் ரெஜிஸ்டர் ஒன்றையும் தினசரி பராமரித்து வருகிறோம். தினசரி வசூல் தொகையை நாணய பதிவேட்டில் பதிவுசெய்துவருகிறோம். 09.08.2014 மற்றும் 10.08.2014 ஆகிய இருதேதிகளின் வசூல் தொகையை நாணய பதிவேட்டில் பதிவுசெய்துள்ளோம் என்றால் சரிதான். பில்கள் சிட்டா நோட்டில் பதிவுசெய்யப்படும். சம்பவ தேதி அன்று பில்களின் விபரங்கள் சிட்டா நோட்டில் பதிவுசெய்யப்பட்டிருந்தது. இது தவிர வருகை பதிவேடு உள்ளிட்ட பதிவேடுகளை பராமரித்துவருகிறோம். தினசரி வசூல் தொகையின் விபரத்தினை மாவட்ட மேலாளர் அலுவலகத்திற்கு தொலைபேசி மூலம் அப்போது தெரிவித்து வந்திருந்தோம். தற்போது குறுஞ்செய்தி மூலமாக தெரிவிதத்துவருகிறோம். மாதம் ஒருமுறை வசூல் அறிக்கையை எழுத்துபூர்வமாக தாக்கல் செய்கிறோம். 2 தேதிகளிலும் வசூலான தொகையை மாவட்ட மேலாளருக்கு தொலைபேசி மூலமாக தெரிவித்திருந்தோம். கடைசியாக நான் கணக்கு முடிக்கும்போது கிருபாகரன் மற்றும் ஆறுமுகம் உடன் இருந்தனர். நான் பெட்டியில் வைக்கும் பணத்தை டினாமினேஷன்களை எழுதி நாணய வாரி பதிவேட்டில் வைத்திருப்பது வழக்கம். அன்றும் வைத்திருந்தேன். 2 நாள் வசூல் தொகைகளை தனித்தனியாக கட்டி வைத்திருந்தேன்.பையில் வைக்கவில்லை. அப்படியேதான் வைத்திருந்தேன். எங்கள் டாஸ்மார்க் கடையில் முன்பின்னாக 2 அறைகள் இருந்தது. கல்லாபெட்டி முன் அறையில் மேஜை டராயரில் உள்ளது. பணம் வைத்திருந்த பெட்டி கோத்திரஜ் லாக்கர் . மேற்படி விபத்தை போலிசார் விசாரணையின்போது கூறினோம். பணம் அரக்கு சீல் வைத்து கட்டவில்லை. மேற்படி பெட்டியின் பூட்டுக்கு 2 சாவிகள் உள்ளன. 2ம் என்னிடம்தான் இருந்தது. எங்கள் கடையில் அப்போது சிடிசி கேமரா நிறுவப்பட்டிருக்கவில்லை.

எங்கள் கடையில் வாட்ச்மேன் இல்லை. இரவு நேரம் மதுபான கடையை பார்த்துக்கொள்ள யாரையும் நியமிக்கவில்லை. கடையை பூட்டிவிட்டுவந்துவிடுவோம். எங்கள் கடையை ஒட்டி பாரும் அருகே பேக்கரி மற்றும் எலக்ட்ரானிக் கடைகள் அமைந்துள்ளது என்றால் சரிதான். நாங்கள் கடையை பூட்டிசெல்லும்போது பாரில் சுமார் 4,5 பேர் இருந்திருப்பர். கடை பேருந்துபோக்குவரத்து உள்ள பல்லடம் மெயின்ரோட்டில்தான் அமைந்துள்ளது. எங்கள் கடைக்கு முன்புறம் வெளியே மின் விளக்குகள் போடபட்டிருக்கும் என்றால் சரிதான். எங்கள் கடையின் தென்புறம் இரவுநேர டீ கடை உள்ளது என்றால் சரிதான். நான் பணத்தின் வரிசை எண்களை குறித்துவைப்பது கிடையாது. எனது வீடு சம்பவ இடத்திலிருந்து சுமார் 25 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது. கடையின் ஷட்டர் 2 சில்வர் நிற பூட்டுகளால் பூட்டப்பட்டிருப்பது. பூட்டுகளின் தயாரிப்பு நிறுவனம் பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. நான் எனது புகாரிலும், போலிஸ் விசாரணையிலும் கம்பெனி பெயரை கூறவில்லை என்றால் சரிதான். பக்கத்தில் உள்ள பாரில் வேலை செய்யும் புவனேஷ்குமார் எங்கள் கடையில் திருட்டு நடந்த விபரத்தைபற்றி தகவல் தெரிவித்தார். எனக்கு தகவல் கிடைத்த நேரம் காலை 6 முதல் 7 வரை இருக்கும். நான் சம்பவ இடத்திற்கு காலை 8 மணிக்குள் வந்துவிட்டேன். எங்கள் கடையில் வேலை செய்யும் யாரும் நான் எங்கள் கடைக்கு வந்தடைந்தபோது வந்தடைந்திருக்கவில்லை. புவனேஷ்குமார் உட்பட பாரில் வேலை செய்வோர்கள் சிலர் மட்டும் அங்கிருந்தனர்.நான் போலிசாருக்கு தகவல் கூறியதன்பேரில் சம்பவ இடம் வந்தார்கள். நான் போலிசார் வந்தபின்புதான் நாங்கள் உள்ளே சென்று பார்த்தோம். தகவல் தெரிந்து போலிசார் சம்பவ இடம் வந்தடைந்தபோது காலை 8.30 மணியிருக்கும்.போலிசார் கள்ளாப்பெட்டி உடைந்திருந்ததை பார்த்தார்கள். புகைப்படம் எடுத்துக்கொண்டார்கள். கைரேகை பதிவுகளையும் எடுத்துக்கொண்டார்கள். போலிசார் சம்பவ இடம் வந்தடைந்தபோது எங்கள் மாவட்ட மேலராளர் சிவபிரகாஷ்ம் எங்களது தகவலின் அடிப்படையில் அங்கு வந்துவிட்டார். நான் போலிசாரிடம் நடந்த விபரங்களை கூறினேன். காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். நாங்கள் உள்ளே சென்று பார்த்தபோது பொருட்கள் எதுவும் கலைந்திருக்கவில்லை. நாணயவாரி பதிவேட்டையும், பில்புக்கையும், சிட்டாவையும், ஸ்டாக் ரெஜிஸ்டரையும் போலிசார் விசாரணையின்போது காட்டினேன். இவ்வழக்கு சம்பந்தமாக போலிசார் அந்த ஆவணங்களின் ஒளி நகல்களை பெற்றுக்கொண்டார்கள். நானும் மாவட்ட மேலாளரும் சென்று புகார் அளித்தோம். புகாரில் நான் மட்டுந்தான் கையொப்பம் போட்டேன். நான் புகார் அளித்த அன்றே போலிசார் வழக்கு பதிவுசெய்துவிட்டனர். சம்பவம் நடந்ததற்கு 2 நாட்கள் கழித்து 13.08.2014 அன்று காலை 11 மணியளவில் போலிசார் திருடப்பட்டதாக சொல்லப்படும் பணத்திலிருந்து ரூ.3,20,000/- மீட்கப்பட்டதாக கூறினர். நான் தகவல் கிடைத்தவுடன் காவல்நிலையம் சென்றுபார்த்தேன். பணத்தை யார் திருடினார்கள் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலிசார் காணாமல் போன பணம் கிடைக்கவில்லை என்றும் அதற்கு மாறாக ஏதோ ஒரு வழக்கில் சம்பந்தப்பட்ட பணம் கிடைத்துள்ளதாகவும் அதனை எடுத்து சமன் செய்துவிடுமாறு என்று கூறினார் என்றாலும் சரியல்ல. நான் உள்ளே வைத்த பணம்தான் திரும்ப கிடைக்கப்பெற்றதா என்று என்னால் அறுதியிட்டு கூறமுடியாது. ஆனால் டினாமினேஷனுக்கு ஒத்துபோய் இருந்தது. பணத்தினை அப்போதைய மாவட்ட மேலாளர் குமரேஸ்வரன் நீதிமன்றத்தில் மனு போட்டு வாங்கினார். எங்கள் டாஸ்மார்க் கடைக்கு

கணக்குகளை சரிபார்க்க பறக்கும் படையினர் அவ்வப்போது வருவர் என்றால் சரிதான். அவர்களிடம் நாங்கள் கணக்கு வழக்குகள், வசூல் தொகைகள் சரிபார்க்க சமர்ப்பிப்பது வழக்கம். தினமும் கணக்கு முடிக்கும் பணத்திற்கு மேற்பார்வையாளரும், அன்று அலுவலில் இருப்பவர்களும் பொறுப்பு ஆவார்கள். நான் மாவட்ட மேலாளர் , பொள்ளாச்சி மற்றும் முதுநிலை மண்டல மேலாளர், கோவை ரசீத் அலிக்கு ஆகியோர்க்கு எழுத்துபூர்வமான புகார் ஒன்றினையும் சமர்பித்தேன். மீதத்தொகை ரூ.1,17,820/- என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. மேற்படிமீதத் தொகை காப்பீடு மூலமாக விண்ணப்பம் செய்துசரிசெய்துகொண்டோம். நான் இதுசம்பந்தமாக துறைரீதியான விசாரணைக்குட்படுத்தப்பட்டேன். நான் மாவட்ட மேலாளரிடம் அப்போது எனது விளக்கத்தினை எழுத்துபூர்வமாக கொடுத்திருந்தேன். கிருபாகரன், ஆறுமுகம் ஆகியோர் துறைரீதியான விசாரணைக்குட்படுத்தப்படவில்லை. நான் வாய்மொழியாக கொடுத்த புகாரினை போலிசார் எழுத்துபூர்வமாக பதிவுசெய்து கையொப்பம் பெற்றுக்கொண்டனர். மேற்படி புகாரில் கிருபாகரன் மற்றும் ஆறுமுகம் ஆகியோர் கையொப்பம் போடவில்லை. மேலாளர் அலுவலகத்தில் இருந்து வந்து திருட்டிற்குபின் கணக்குகளை சரிபார்த்தார்கள் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் பணம் எதுவும் திருடப்படவில்லை என்றாலும், நான் கிருபாகரன் மற்றும் ஆறுமுகம் ஆகியோர் பணத்தை கையாடல் செய்துவிட்டு , துறைரீதியான சோதனையில் இருந்து நானும் எனது மேற்படி சக ஊழியர்களும் தப்பிப்பதற்காக பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

ஒம்/- க.செல்லையா,பிஏ.,பிஎல்.,
நடுவர் நீதிமன்றம் எண்.2
பொள்ளாச்சி